## இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

**O.S No. 69 /2019**

2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. சீனிவாசன், இளநிலை உதவியாளர்அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வரதராஜபெருமாள் | தந்தை/கணவர் பெயர் | : | |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 20.10.2021

**PW.3:–**

**குறுக்கு விசாரணை**

**நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். கையெழுத் ஆங்கிலத்தில் போட தெரியும். புரோநோட்டில் நான் போட்ட கையெழுத்தும் மேல எழுதிய வாசகமும் வேறுபட்டு காணப்படுகிறது என்றால் சரியல்ல. மேல உள்ள வாசகம் என்னால் தான் எழுதியது. வாதிக்கும் எனக்குஎன்ன பழக்கம் என்றால் கடை வைத்த வகையில் இருவரும்பழக்கம். இருவரும் அடிக்கடி மாறி மாறி வீட்டிற்கு வருவோம் என்றால் எப்போதாவது செல்வோம். பிரதி வாதி தெரியும் என்றால் நேரடியாக தெரியாது.நான் பார்த்துள்ளேன். அவர் வழக்கு போட்ட விவரம் எனக்கு தெரியும் . அவர் கடன்**

வாங்கும் போது நான் வாதி வீட்டில் இருந்தேன். மாலை நேரம் அந்த சமயத்தில் வாதி பிரதிவாதிக்கு ரூ. 8 லட்சத்தி 50 ஆயிரம் ரொக்கமாக கொடுத்தார் .ரூ. 8 லட்சத்தி 50 ஆயிரம் பணத்தை நேரடியாக கொடுக்கவில்லை என்றும் வாதிக்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் சரியல்ல. கடனுறுதி சீட்டில் சாட்சி கையெத்து செய்த நபர்களை தெரியும்., யார் யார் என்றால் முத்து'க்குமார் , ரவி என்றும் முதலில் யார் கையெழுத்து போட்டால் என்றால் முத்துக்குமார் போட்டார். இவ்வழக்கின் வாதி சாட்சியத்தில் ஆவணம் எழுதிய நபர், சாட்சி கையெப்பம் செய்த நபர்கள் ஆகியேரை பொறுத்து சொல்ல வில்லை என்றும் அதனை சரிகெட்டுவதற்கு காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் பிரதிவாதி , வாதியிடம் எந்த தொகையும் பெறவில்லை என்றும் அவர் வீட்டில் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலே கண்ட முகவரியில் வசிப்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமணவாக்குமூலத்தில் எங்கு , எப்போது ,எத்தனை மணிக்கு எவ்வளவு தொகை யார் முன்னிலையில் கொடுக்கப்பட்டது , போன்ற விவரங்கள் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லி உள்ளேன். என்னுடைய பிரமண வாக்குமூலத்தில் மேல கண்ட விவரங்கள் நான் பிரமாண வாக்குமுலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

வாதிக்கு ஆதராவாக அவர் ஆதாயம் பெறும் நோக்கில் நான் பொய்யாக சாட்சியம் என்றால் தவறு .

Web copy